தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

ஆணை நாள் - 04.11.2026

முன்னிலை

திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண்.CP 4284/F/2024

திரு.சா.நடராசன் .. புகார்தாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
வருவாய் கோட்டாட்சியரின்
நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், .. பொது அதிகார அமைப்பு
திருக்கோவிலூர் வட்டம்,
கள்ளக்குறிச்சி-605757.

ஆணை-II

இவ்வாணையம் 23.09.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.ந.அனந்தசயனன், சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளர், சார் ஆட்சியர் அலுவலகம், திருக்கோவிலூர் அவர்கள் 04.11.2026 இன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி தற்போது கடிதத எண். ந.க.அ3/3341/2026, நாள் 02.11.2026 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல் வழங்கியுள்ளதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் அப்போதைய பொதுத்தகவல் அலுவலர், திரு.பா.ராஜவேல், (ஓய்வு) முன்னாள் உதவி ஆணையர் (கலால்), மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) (பொறுப்பு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி அவர்கள் 04.11.2026 இன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி அவரது எழுத்துமூல விளக்கத்தினை சமர்ப்பித்தார். மற்றும் தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.அ.காதர் அலி, வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருக்கோவிலூர் அவர்களின் எழுத்துமூல விளக்கத்தினையும் சமர்ப்பித்தார். அவ்விளக்கத்தில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த மனுவானது பொதுத்தகவல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), கள்ளக்குறிச்சி அவர்களால் சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் 13.03.2023 அன்று திருக்கோவிலூர் வருவாய் கோட்டாட்சியரின் அலுவலக பொதுத்தகவல் அலுவலருக்கு கிடைக்கப்பெற்றதாகவும் மனுதாரர் திருக்கோவிலூர் வட்டம், முதலூர் கிராமத்தில் புல எண்கள் 78/4இ 78/3A, 3B, 3C-ல் பட்டா மாற்றம் செய்யப்பட்ட RTR கோப்பு 382/1990 கோப்பு தொடர்பான தகவல்களை கோரியிருந்ததாகவும், மேலும் புகார் மனு மீதான விசாரணையின் விபரங்களையும் கோரியிருந்ததாகவும் இந்த விபரங்கள் திருக்கோவிலூர் வட்டாட்சியர் அலுவலகம் தொடர்பானது என்பதாலும் மனுதாரர் கோரிய தகவல்கள் இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லை என்பதாலும் அவருக்கு தகவல் அளிக்க அறிவுறுத்தி திருக்கோவிலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பொது தகவல் அலுவலருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(3)ii-ன் கீழ் 29.03.2023 அன்று மனு மாற்றம் செய்து அனுப்பப்பட்டது என்பதையும் அதன் நகல் மனுதாரருக்கு அனுப்பப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், அதன் நகலினையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் தற்போதைய பொதுத்தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்களை இவ்வாணையம் ஏற்கிறது. அப்போதைய பொதுத்தகவல் அலுவலர், திரு.பா.ராஜவேல், (ஓய்வு) முன்னாள் உதவி ஆணையர் (கலால்), மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) (பொறுப்பு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி அவர்களின் விளக்கத்தினை இவ்வாணையம் ஏற்கிறது. அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.அ.காதர் அலி, வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருக்கோவிலூர் அவர்களின் எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையம் ஏற்கிறது என்பதை பதிவு செய்து இவ்வாணையம் கீழ்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவினை சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் மூ.மு.அ3/1043/2023, நாள் 29.03.2023 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மாற்றம் செய்த அம்மனுவினைப்பெற்றும் தகவல் வழங்காத, அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் மற்றும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருக்கோவிலூர் அவர்கள் மீது சட்டப்பிரிவு 20(1) மற்றும் 20(2) ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூல விளக்கத்தினை அப்போதைய பொதுத்தகவல் அலுவலரிடமிருந்து பெற்று தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் 02.12.2026 அன்று

இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது".

ஓம்/-(அபய் குமார் சிங்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

வழக்கு எண். CP 4284/F/2024

பெறுநர்

பொது அதிகார அமைப்பு:-

பொதுத்தகவல் அலுவலர் /
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
திருக்கோவிலூர் வட்டம்,
கள்ளக்குறிச்சி - 605757.

அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்

வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
திருக்கோவிலூர் வட்டம்,
கள்ளக்குறிச்சி - 605757.
(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)

அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்,

தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருக்கோவிலூர்.
(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)

அப்போதைய பொதுத்தகவல் அலுலர் /

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி-606202.
(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)

மேல்முறையீட்டாளர்:-

திரு.சா.நடராஜன்,
எண்.2/76, முருகன் கோயில் தெரு,
முதலூர் கிராமம்,
எல்ராம் பட்டு,
திருக்கோவிலூர் வட்டம்,
கள்ளக்குறிச்சி-605803.

Copy to file: KR/PA